## சுருக்கம்

நெடுஞ்சாலைகள்–தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம்–III-ன் கீழ் செயல்படுத்த உத்தேசித்திருந்த 3 இரயில்வே மேம்பாலம் / கீழ்பாலப் பணிகளை நீக்கி மாநில நிதியிலிருந்து இரயில்வே துறையுடன் பணப்பகிர்வு அடிப்படையில் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளித்தல்–ஆணை வெளியிடப்படுகிறது

---

நெடுஞ்சாலைத் (எச்.க்யூ.2) துறை

**அரசாணை (நிலை) எண் 60** **நாள் 06.03.2008**

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண் 145, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (நகர்புற வளர்ச்சி–III) நாள் 29.04.2005
2. தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) கடித எண் 4837/பி2/2006, நாள் 15.02.2007, 15.03.2007, 02.04.2007 மற்றும் 25.09.2007

–––––

ஆணை.

மேலே ஒன்றில் படிக்கப்பட்டஅரசாணையில் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்டம்–III ன் கீழ் போக்குவரவு மற்றும் போக்குவரத்து திட்டத்திற்கு 150 மில்லியன் டாலர் உலக வங்கி நிதியிலிருந்து அனுமதித்து அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டதில், 9 இரயில்வே மேம்பாலங்கள் / இரயில்வே கீழ்பாலங்கள், 3 அடுக்கு பாலங்கள் (Grade Separators) மற்றும் 3 பாதசாரிகளுக்கான சுரங்கப்பாதைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள், . கீழ்காணும் இரண்டு இரயில்வே மேம்பாலங்களும். ஒரு இரயில்வே கீழ்பாலமும் அடங்கும்.

(i) கூடுவாஞ்சேரி–சிங்கப்பெருமாள் கோவில் இரயில்வே நிலையங்களுக்கிடையே இரயில்வே இருப்புப் பாதை கடவு எண் 47– க்கு பதிலாக சாலை மேம்பாலம் அமைத்தல்

(ii) வண்டலூர்–கூடுவாஞ்சேரி இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே இருப்புப் பாதை கடவு எண் 40–க்கு பதிலாக சாலை மேம்பாலம்அமைத்தல்

(iii) வில்லிவாக்கம்–அம்பத்துார் இரயில் நிலையங்களுக்கிடையில் கொரட்டூரில் அமைந்துள்ள இரயில்வே இருப்புப் பாதை கடவு எண் 4–க்குப் பதிலாக சாலை கீழ்பாலம் அமைத்தல்

இம்மூன்று பணிகளுக்கு ஆலோசகரை நியமித்து உலக வங்கியின் வழிகாட்டுதலின்படி விவரமான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருவதாகவும், தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையை சரிபார்க்க அரசாணை (நிலை) எண் 148, நெடுஞ்சாலைத் (எச்.டபுள்யூ.1) துறை,, நாள் 31.05.2007–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) தெரிவித்துள்ளார்.

2. இரயில்வே கடவு எண்கள் 47 மற்றும் 40–ல் கட்டப்பட வேண்டிய மேம்பாலங்கள் சிங்கப் பெருமாள்கோயில்–ஸ்ரீபெரும்புதுார் சாலையில் தே.நெ.45 உடன் இணையும் என்பதாலும், அங்கு மகேந்திரா நகரம் (தொழில் நுட்பச் சாலை) வரவிருப்பதாலும், மகேந்திரா கார் தொழிற்சாலை போன்ற

தொழிற்சாலைகளும், பொது மக்களும் பெரிதும் பயனடைவார்கள் என்பதாலும், இப்பாலங்களை தாமதமின்றி கட்ட வேண்டியுள்ளது. அதைப்போன்று, 15000 மக்களுக்கு பயனளிக்கும் வகையில் கொரட்டூர் பகுதியினுள் இரயில்வே கடவு எண் 4–ல் இரயில்வே கீழ்பாலமும் கட்டப்பட வேண்டிள்ளது எனவே, மேற்கண்ட பணிகளின் அவசர முக்கியத்துவத்தைக் கருதி காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு இப்பணிகளை தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம்–III-ல் இருந்து நீக்கி மாநில நிதியில் மேற்கொள்ளலாம் எனக் கருதப்பட்டது. 2007–2008 ஆம் ஆண்டுக்கான விலை விவர அட்டவணையின்படி இம்மூன்று பணிகளுக்கான மதிப்பீடு ரூ. 102.70 கோடி என தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) குறிப்பிட்டு, இம்மூன்று பணிகளும் இரயில்வே வேலைத் திட்டம், 2004–05 மற்றும் 2006–07–ல் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன என்றும், எனவே, மேற்காணும் மூன்று இரயில்வே மேம்பால / கீழ்பால பணிகளையும் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சிதிட்டம்–III லிருந்து நீக்கம் செய்து மாநில நிதியிலிருந்து தென்னக இரயில்வேயுடன் பணப்பகிர்வு அடிப்படையில் செயல்படுத்துவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு கேட்டுள்ளார்..

3. தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை அவர்களின் செயற்குறிப்பு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. இப்பணிகளுக்கான தோராய மதிப்பீடான ரூ. 102.70 கோடியில் மேற்பார்வை கட்டணம் மற்றும் சில்லரை செலவினத்திற்காக நிர்ணயித்துள்ள 2 சதவீதம் மற்றும் 3 சதவீதத்திற்கு பதிலாக 1.5 சதவீதம் மற்றும் 2.5 சதவீதமாக நிர்ணயம் செய்யலாம் எனக் கருதப்பட்டு மொத்த மதிப்பீடுத் தொகையான ரூ. 102.70 கோடிக்கு பதிலாக, குறைக்கப்பட்ட ரூ. 101.90 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) பரிந்துரையினை ஏற்று, பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று இரயில்வே மேம்பாலம் / கீழ்பால பணிகளை தமிழ்நாடு நகர்புற வளர்ச்த் திட்டம்–III-லிருந்து நீக்கம் செய்து மாநில நிதியிலிருந்து இரயில்வே துறையுடன் பணப் பகிர்வு அடிப்படையில் செயல்படுத்துவதற்கு ரூ. 101.90 கோடிக்கு கீழ்கண்டவாறு நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | கடவு எண் மற்றும் பணியின் பெயர் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1) | வில்லிவாக்கம்–அம்பத்துார் இரயில் நிலையங்களுக்கிடையில் கொரட்டூரில் அமைந்துள்ள இரயில்வே இருப்புப் பாதை கடவு எண் 4–க்குப் பதிலாக சாலை கீழ்பாலம் அமைத்தல் | 19.9678 (அல்லது) 19.97 |
| 2) | வண்டலூர்–கூடுவாஞ்சேரி இரயில் நிலையங்களுக்கிடையே இரயில் இருப்புப் பாதை கடவு எண் 40–க்கு பதிலாக சாலை மேம்பாலம் அமைத்தல் | 29.0377 (அல்லது) 29.04 |
| 3) | கூடுவாஞ்சேரி– சிங்கப்பெருமாள் கோவில் இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே இருப்புப் பாதை கடவு எண் 47– க்கு பதிலாக சாலை மேம்பாலம் அமைத்தல் | ரூ. 52.8928 (அல்லது) ரூ.52.89 |
| | மொத்தம் | 101.8983 (அல்லது) 101.90 கோடி |

4. மேலும், இப்பாலப் பணிகளுக்கான திட்டச் செலவினத்தினை கீழ்கண்ட வகையில் செலவிட தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை.15 அவர்களுக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

| | |
|---|---|
| 2007–08 ஆம் ஆண்டு | ரூ. 2.70 கோடி |
| 2008–09 ஆம் ஆண்டு | ரூ. 49.20 கோடி |
| 2009–10 ஆம் ஆண்டு | ரூ 50.00 கோடி |
| மொத்தம் | ------------<br>ரூ. 101.90 கோடி<br>------------ |

5. இரயில்வே பகுதியில் கட்டப்படும் பாலப் பணிகளுக்கு ஏற்படும் மொத்த செலவினத்தில் 50 விழுக்காடு தொகையை இரயில்வே துறையிடமிருந்து பெற்று தொடர்புடைய அரசு கணக்கில் சேர்க்குமாறும், அது குறித்த விவரங்களை அரசுக்கு உடன் தெரிவிக்குமாறும் தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை.15 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் " புதிய திட்ட துணைப் பணிகள் (New Instrument of Service)" குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில், இத்திட்டத்திற்கான ஆரம்பச் செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு–செலவு பொது–1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு–செலவு பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை.15 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலும், இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, இவ்வாண்டின் இறுதித் துணை மதிப்பீட்டில் (Final Supplementary Estimates) சேர்த்திட இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில் பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (வரவு–செலவு பொது–1) த் துறைக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை.15 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.–

> 5054–சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு–80–பொது–800–ஏனைய செலவு–பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் – JT – இருப்புப் பாதை மேம்பாலங்கள் / இருப்புப்பாதை கீழ்பாலங்களைக் கட்டுதல்–16 பெரும் பணிகள் (த.தொ.குறியீடு எண் 5054–80–800–JT-1604)

9. இவ்வரசாணை நிதித் துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.கு. எண் 12282/Fin (PW I). நாள் 01.03.2008–ன்படி வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1942 (ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து இரண்டு).

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்
அரசு செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை.15.
தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை, சென்னை.5
பொது மேலாளர், தென்னக இரயில்வே, சென்னை.3
தலைமைப் பொறியாளர் திட்ட மேலாளர் (இருப்புப்பாதை மாற்றம்), தென்னக ரயில்வே, சென்னை.8
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை. 18/35
கருவூல அலுவவர், சென்னை.15.
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை.9
நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை.9
நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை.9
இத்திட்டம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்
இத்துறையின் அனைத்து திட்டப் பிரிவுகள், சென்னை.9
நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை.9
நிதி (பொதுப் பணி 1 / வ.செ.பொது 1/வ.செ.பொது 2/கடன் சான்றுத் துறை, சென்னை.9
இ.கோ./உ.கோ.

/உத்தரவுப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.